செ.வெ.எண் : 931/2017 நாள் : 07.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

## வேளாண்பயிர் மற்றும் தோட்டக்கலைபயிர் சேதம் விபரம் குறித்த அறிக்கை டிசம்பர் 12க்குள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும்

## வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

----

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் ஏற்பட்டுள்ள வேளாண் பயிர் மற்றும் தோட்டக்கலைபயிர் சேதம் விபரம் குறித்த அறிக்கை டிசம்பர் 12க்குள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் கடந்த மாதம் 29-ம் தேதி நள்ளிரவு கடுமையான சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்ததன் காரணமாக கடும் சேதங்கள் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி அவர்கள் பயிர் சேதம் அடைந்த பகுதிகளை பார்வையிட்டு சேதம் குறித்த கணக்கெடுப்பு பணியினை ஆய்வு செய்தார். குருந்தன்கோடு வட்டாரம் கல்படி ஏலா பகுதியில் புயலினால் பாதிப்படைந்த வாழை தோட்டங்களையும், காருபாறை கிராமத்தில் புயலினால் பாதிப்படைந்த தென்னந்தோப்புக்களையும் பார்வையிட்டார்.

அதன்பிறகு வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

நடப்பு பருவத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 4384 எக்டர் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் 287 ஹெக்டர் பரப்பு நீர் தேங்கியதால் பாதிப்படைந்துள்ளது. அவற்றில் 82 ஹெக்டர் பரப்பில் கணக்கெடுப்பு பணி இதுவரை நிறைவடைந்துள்ளது. மேலும் 8905 தென்னை மரங்கள் புயலினால் அடியோடு சாய்ந்துள்ளது. அவற்றில் 4568 தென்னை மரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணி நிறைவடைந்துள்ளது.

அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், வாசனை திரவிய பயிர்கள், மற்றும் மலர் பயிர்கள் 41,186 ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 100 வருடங்களில் இல்லாத அளவில் ஓகி புயல் மற்றும் கனமழை காரணமாக வாழை, மரவள்ளி, ரப்பர், கிராம்பு, நல்ல மிளகு, கமுகு போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் முக்கிய பயிர்களான ரப்பர் மரங்கள் சுமார் 5.63 இலட்சம் எண்களும், வாழை சுமார் 48.15 இலட்சம் எண்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய் துறை இணைந்து மதிப்பீடு செய்தனர்.

5,095 விவசாயிகளால் பயிரிடப்பட்ட வாழை 1926.0236 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 950 விவசாயிகளால் பயிரிடப்பட்ட மரவள்ளி 190.885 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 2790 விவசாயிகளால் பயிரிடப்பட்ட ரப்பர் 1407.9187 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 32 விவசாயிகளால் பயிரிடப்பட்ட கிராம்பு 42.2 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 41 விவசாயிகளால் பயிரிடப்பட்ட மிளகு 32.04 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 206 விவசாயிகளால் பயிரிடப்பட்ட பாக்கு, சாதிக்காய், கொகொ, மா, கத்தரி, பலா, எலுமிச்சை, நார்த்தை போன்ற பயிர்கள் 23.965 ஹெக்டர் பரப்பளவில் பாதிக்கப்பட்டுள்ளது.. மொத்தமாக 9114 விவசாயிகள் மூலம் பயிரிடப்பட்ட 3623.0323 ஹெக்டர் பரப்பளவிலான தோட்டக்கலைப்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையில் அலுவலர்களின் எண்ணிக்கை குறைந்த அளவில் இருப்பதால் தோட்டக்கலைப்பயிர்களின் சேத விபரம் குறித்து துல்லியமாக விரைந்து கணக்கெடுப்பு நடத்திட தூத்துக்குடி, திருடிநல்வேலி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், தேனீ மாவட்டங்களில் இருந்து 71 அலுவலர்களும் இம்மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலைத்துறையில் இருந்து 8 அலுவலர்களும், வேளாண் பொறியியல் துறையில் இருந்து 11 அலுவலர்களுமாக மொத்தம் 90 அலுவலர்கள் பணியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள 18 குறுவட்டங்களில் தோட்டக்கலை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர், உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர்கள் வாரியாக குறுவட்டத்திற்கு 2 முதல் 8 அலுவலர்கள் வரை பணியமர்த்தப்பட்டு வருவாய்துறையில் கிராம நிர்வாக அலுவலர், மற்றும் வருவாய் அலுவலர்களுடன் இணைந்து கணக்கெடுப்பில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் கணக்கெடுக்கும் பணியினை விரைந்து முடித்திட தோட்டக்கலை இணை இயக்குநர், சென்னை அவர்கள் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். தோட்டக்கலைப் பயிர்களின் சேத விபரம் குறித்த கணக்கிடுக்கும் பணி நேற்றில் (06.12.2017) இருந்து தொடங்கப்பட்டுள்ளது. இந்த துல்லிய கணக்கிடுப்பு முடியும் போது தான் துல்லியமான சேத விபரம் தெரியவரும். கணக்கெடுக்கும் பணியினை 12.12.2017 தேதிக்குள் முடித்திட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பயிர் பாதிப்பு குறித்த கணக்கெடுப்பு பணி முழுவீச்சில் நடவடிக்கை மேற்கொண்டு டிசம்பர் 12ஆம் தேதிக்குள் கணக்கெடுப்பு பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி.**